ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2366/19 - 2024 ජනවාරි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.01.11

*2366/19 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, சனவரி மாதம் 11 ஆம் திகதி.

**ஒழுங்கு விதிமுறைகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. இவ் ஒழுங்குவிதிகளானது, திருத்தம் செய்யப்பட்ட 2023, சனவரி மாதம் 01 ஆந் திகதிய 2312/78 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் கட்டாயப் பகுதியொன்றாக வெளியிடப்படுகின்றது.

1A - PG 6618 — 406 (2024/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 4 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலரின் சிபாரிசின் கீழ் இ.மு அத்தியாயம் 87 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் வாகன இறக்குமதியின் போது பின்பற்றக்கூடிய நடைமுறையிலுள்ள ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ், இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படும்.

| இ.மு குறியீட்டிலக்கம் | விபரம் | அலகுகளின் எண்ணிக்கை | இறக்குமதியாளர் /பொருட்களைப் பெறுபவர் |
|---|---|---|---|
| 8702.10.75 | வணிக வகுப்பு ரம்ப் கோச் | 03 | ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் |
| 8702.10.75 | பஸ் வண்டி | 01 | கல்வி அமைச்சு |
| 8702.10.55 | பஸ் வண்டி | 01 | கல்வி அமைச்சு |
| 8704.22.61 | நடமாடும் மகப்பேற்று அலகு | 03 | சுகாதார அமைச்சு |
| 8704.21.91 | டபள் கெப் வண்டி | 21 | சுகாதார அமைச்சு |
| 8703.32.79 | எஸ்யூவீ | 01 | தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு |

4. துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2023, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 23/2288/628/105/TBR ஆம் இலக்க விஞ்ஞாபனம் தொடர்பாக 2023, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் மேற்பார்வையுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற அவ் விஞ்ஞாபனத்திற்கு 2023 திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, வணிக வங்கிகளுக்கு மற்றும் வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு "**செயற்பாட்டு ஆலோசனைகள்**" வழங்கப்படும்.

6. மேற்படி ஒழுங்குவிதிகளை செயற்படுத்தும்போது எழுகின்ற எந்தவொரு பிரச்சினைகளின்போதும் இறுதி முடிவானது, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தால் எடுக்கப்படும்.

EOG 01 - 0102

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.